## 53. சுற்றந் தழால்

**521.** *பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்*
*சுற்றத்தார் கண்ணே உள*

**பற்றற்ற போதும், வறுமை வந்த போதும்**
**பழைய உறவைப் பாராட்டிப் பேசும்**
**பசுமை மிகுந்த நெஞ்சம், பாசத்துடன்**
**பழகிய சுற்றத்தாரிடம் மட்டுமே உள்ளது !**

**522.** *விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா*
*ஆக்கம் பலவுந் தரும்*

**விருப்பும் அன்பும் நீங்காத சுற்றம் ஒருவனுக்கு**
**விரும்பியபடி அமைந்து விட்டால்**
**வியத்தகு வளர்ச்சியும், ஆக்கமும்**
**விருப்பத்துடன் விளையும் !**

**523.** *அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்*
*கோடின்றி நீர்நிறைந் தற்று*

**சுற்றத்தாரைச் சுற்றி சுற்றி வந்து**
**சுகமான அளவளாவுதலைக் கொண்டு**
**சுவைக்காத வாழ்க்கை**
**சுற்றுக்கரையில்லாத குளத்தில்**
**சுவை நீர் நிறைந்ததைப்போல் பயனற்றுப் போகும் !**

**524.** *சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தாற் பெற்ற பயன்*

**பெற்ற செல்வத்தால் வாழ்க்கையில்**
**பெறுகின்ற பெரும் பயன் என்னவெனில்**
**பெரும் சுற்றத்தார் அன்புடன் சூழ்ந்திருந்து**
**பெறுகின்ற இனிய ஒழுகல் !**

**525.** *கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய*
*சுற்றத்தாற் சுற்றப் படும்*

**உதவி செய்யும் வள்ளல் தன்மையோடும்**
**உள்ளன்புடன் எப்போதும் இன்சொல்லை**
**உச்சரித்து வாழ்பவனை**
**உற்றார் உறவினர் மட்டுமின்றி**
**உலகத்தாரே உறவாவார் !**

526. *பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
*மருங்குடையார் மாநிலத் தில்*

**கொடுத்துக் கொடுத்து பெரும் கொடை வள்ளலாகவும்**
**கொஞ்சம் கூட கடுகடுத்து கோபம் இல்லாத குணம்**
**கொண்டவராக இருப்பவர்க்குக்**
**கொண்டாடும் சுற்றத்தார் சூழ உலகில் வேறு**
**கொண்டவர் யாருமில்லை !**

527. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள*

**காக்கைத் தனக்குக் கிடைத்த உணவை**
**கா...கா.. எனத் தன் சுற்றத்தாரை**
**காத தூரம் இருந்தாலும் அழைத்து உண்ணும் !**
**காணும் இக்குணம் உடையவர்களால் சுற்றத்தாரால்**
**காண்பர் ஆக்கமும் முன்னேற்றமும் !**

528. *பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
*அதுநோக்கி வாழ்வார் பலர்*

**பொது மக்கள் அனைவரையும்**
**பொது நோக்கோடு சமமாகப் பார்க்க வேண்டியவன்**
**பொது மக்களின் தலைவன் வேந்தன் – எனினும்**
**பொறுப்புகளைத் தரும் போது அவரவர் தகுதியின்**
**பொருட்டு நோக்கினால் அதனால் பலர் வாழ்வர் !**

529. *தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்*
*காரண மின்றி வரும்*

**உறவினை ஏதோ காரணத்திற்காக**
**உடன்பாடில்லாமல் பிரிந்தவர்**
**உறவு பிரிந்ததற்கானக் காரணத்தின்**
**உண்மை தெரிந்தவுடன் மீண்டும் உறவாடுவார் !**

530. *உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்*
*இழைத்திருந் தெண்ணிக் கொளல்*

**காரணம் கற்பித்து பிரிந்து போனவர் – வேறு**
**காரணத்தால் வேந்தனை உறவு கொண்டாடி**
**காண வந்தவரை நன்கு ஆராய்ந்தபின்பு தான் உறவு**
**காக்க வேண்டும் !**